MINISTRY OF MANPOWER

# CONNECT with ACE

## வெளிநாட்டு ஊழியர்களுக்கான மாதாந்திர மின் செய்திமடல்





ஏப்ரல்
2023

### இந்தப் பதிப்பில்:


உரிமம் இல்லாத பணம் அனுப்பும் சேவைக்கு 'வேண்டாம்' என்று சொல்லுங்கள்

ரம்சான் பெருநாள் 2023

கஞ்சி விநியோகம் மற்றும் கூட்டுத் தொழுகை

## முக்கிய அறிவிப்புகள்



# உரிமம் இல்லாத பணம் அனுப்பும் சேவைக்கு ‘வேண்டாம்’ என்று சொல்லுங்கள்

## 1 எச்சரிக்கை

உரிமம் இல்லாத பணம் அனுப்பும் சேவை வழங்குநருக்கு

- சிறை தண்டனை விதிக்கப்படலாம்
- அபராதம் விதிக்கப்படலாம்
- சிங்கப்பூரில் பணிபுரிவதற்குத் தடை விதிக்கப்படலாம்






## 2 சோதித்தறியுங்கள்




**பணம் அனுப்ப வேண்டுமென்றால் என்ன செய்வது?**

- **உரிமம் பெற்ற வங்கி அல்லது பணம் அனுப்பும் சேவை வழங்குநர்** மூலம் பணம் அனுப்புங்கள்
- https://go.gov.sg/oas8d7 என்ற இணையத்தளத்திற்குச் சென்று அல்லது க்யூஆர் குறியீட்டை வருடி சிங்கப்பூரில் உள்ள உரிமம் பெற்ற வங்கி அல்லது **பணம் அனுப்பும் சேவை வழங்குநர்** பட்டியலைப் பெறவும்.

## 3 புகார் அளியுங்கள்

- உரிமம் இல்லாத பணம் அனுப்பும் சேவை வழங்குநர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியவந்தால் 1800-255-0000 **என்ற இலவச தொடர்பு எண்ணை வைத்து காவல் துறைக்கு அழையுங்கள்.**

- மோசடிகள் பற்றி மேலும் தகவல் அறிய **www.scamalert.sg என்ற இணையத் தளத்திற்குச் செல்லவும் அல்லது** 1800-722-6688 **இலவச மோசடித் தடுப்பு எண்ணை அழையுங்கள்.**



# ரம்சான் பெருநாள் 2023



## ரம்சான் பெருநாள் தொழுகை நேரங்கள்

இஷா தொழுகைக்குப் பிறகு
தராவீஹ் தொழுகை நடத்தப்படும்.

இவ்வாண்டு தொழுகை நேரங்கள்
பற்றி அறிய இந்த க்யூஆர்
குறியீட்டை வருடவும் அல்லது
இங்கே சொடுக்கவும்!

## பள்ளிவாசல்களில் தொழுகை நேரங்கள்



தராவீஹ் தொழுகைக்கான இணையப்
பதிவுக்கு இங்கே சொடுக்கவும் அல்லது இந்த
க்யூஆர் குறியீட்டை வருடவும்.

மேலிருக்கும் பட்டியலில் இல்லாத
பள்ளிவாசல்களில் நீங்கள் சென்று தராவீஹ்
தொழுகையில் ஈடுபடலாம். (தொழுகை
இடங்கள் காலியாக இருப்பதைப்
பொருத்தது).

தொழுகைப் பாய் போன்ற உங்களுடையத்
தனிப்பட்ட தொழுகை பொருள்களை
அன்புகூர்ந்து எடுத்து வரவும்.

**அனைத்து வெளிநாட்டு சகோதரர்களுக்கும்
இனிய ரம்சான் பெருநாள் நல்வாழ்த்துகள்!!**

# நிகழ்வின் சிறப்பம்சங்கள்



## கஞ்சி விநியோகம்  மற்றும் கூட்டுத் தொழுகை

2023 ஏப்ரல் 1ஆம் தேதி அன்-நூர் பள்ளிவாசல் மற்றும் அன்- நஹ்தா பள்ளிவாசலில் நார்த்கோஸ்ட் விடுதியின் வெளிநாட்டு சகோதரர்களுக்கு 1000 கஞ்சியும் 100 பிரியாணியும் விநியோகிக்கப்பட்டன. அனைவரும் சேர்ந்து நோன்பு துறந்த பின்னர் பள்ளிவாசல் ஏற்பாடு செய்த கூட்டுத் தொழுகையிலும் நமது வெளிநாட்டு ஊழியர்கள் ஈடுபட்டனர்.

## 'கரையோரப் பூங்கா' சுற்றுலா

இரட்சண்ய சேனை மற்றும் பார்க்கர் ரோடு மெதடிஸ்ட் தேவாலயம் இணைந்து ஏற்பாடு செய்த உற்சாகமான **கரையோரப் பூங்கா** சுற்றுலாவில் நமது வெளிநாட்டு சகோதரர்கள் கலந்துக்கொண்டு அங்குள்ள பல்வேறு கண்கவர் இடங்களைப் பார்வையிடும் வாய்ப்பைப் பெற்றனர்! சுற்றுலாவின் முடிவில் வெளிநாட்டு சகோதரர்கள் சுவைமிகு இரவுணவையும் உண்டு களித்தனர்.





## வெளிநாட்டு ஊழியர்கள் சுகாதார விழா

மைபிரதர்எஸ்ஜி ஏற்பாடு செய்த சுகாதார விழா கிராஞ்சி பொழுதுபோக்கு நிலைய வெளிப்புறத்தில் நடந்தது. குதூகலமான கற்றல் நாளாக அமைந்த இவ்விழாவில் நமது வெளிநாட்டு சகோதரர்கள் உற்சாகமாகப் பங்கேற்றனர்.

அடிப்படை சுகாதார சோதனைகளை மேற்கொண்டதுடன் பங்கேற்பாளர்கள் கற்றல் விளையாட்டுகளிலும் பங்கேற்று பொதுவாக காணப்படும் நோய்கள் சார்ந்த ஆபத்துகளைப் பற்றி மேலும் அறிந்து கொண்டனர்.




நீங்கள் பங்கேற்கக்கூடிய பல்வேறு **நேரடி மற்றும் இணைய நடவடிக்கைகளைப்** பற்றி மேலும் அறிய இங்கே காணப்படும் QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்!

*அண்மைய செய்திகள் மற்றும் புதுப்பிப்புகளைப் பற்றி அறிய எங்கள் அதிகாரப்பூர்வ ஒளிவழிகளில் எங்களைப் பின்தொடரவும்!*

- ஏஸ் குழுமத்தின் ஃபேஸ்புக் பக்கம்
- ஏஸ் குழுமத்தின் டிக்டொக் ஒளிவழி
- மனிதவள அமைச்சின் யூடியூப் ஒளிவழி